1993 ஏப்ரல் 26]

(ஆ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை.

கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 106,79,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27—4—1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 6.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

192. சேலம் ஹோலி கிராஸ் புறநகர் வளர்ச்சி நிலையத்தினால் உபயோகப்படுத்துவதற்காக வாங்கப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12—11—1992-ஆம் நாளிட்ட 397-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

193. ஈரோடு, திரு. கே. வாசுதேவனின் மகனாகிய திரு. செந்தில்குமார் என்பவரால் வாங்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபரால் உபயோகப்படுத்தப்படுகின்ற சிறப்பு வடிவமைப்புடன் கூடிய மாருதி காருக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—12—1992-ஆம் நாளிட்ட 431ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

194. திருவாளர்கள் கோவை நகர்ப்புற தொழுநோய் ஒழிப்புத் திட்டம் நிறுவனத்தின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட டெம்போ டிராவலர் வாகனத்திற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—12—1992ஆம் நாளிட்ட 1645ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

195. 1991-92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

222. கோரிக்கை எண் 25—கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் கொள்கையும், திட்டங்களும், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

223. கோரிக்கை எண் 29—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

224. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

225. தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டு திட்டங்கள் பற்றிய சிறு புத்தகம் (தமிழ்).

226. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS